JET13-2-2-TA

# பராமரிப்பாளர்களுக்கு தெவன் அளிக்கும் ஊக்கம் - நிகழ்ச்சி 2

**அறிவிப்பாளர்:...**இன்றைய நிகழ்ச்சி ஜான் அன்கர்பர்க் நிகழ்ச்சி

**கேன் டாடா:...**ஒரு நாள் மாலை என் படுக்கையில் அமர்ந்தபடி நான் சொன்னேன், ஜோனி, உன்னை நான் நேசிக்கிறேன், ஆனால் என் இயலாமை அதை செய்யவிடாமல் தடுக்கிறது."

**அறிவிப்பாளர்:...**நாள்தோறும் துயரத்தை அனுபவிக்கும் மக்களை நேசிப்பவர்களுக்கு உதவியும், உற்சாகமும் தேவன் எப்படி தருகிறார்?

ஜோனி எரிக்சன் டாடா:..என் மன அழுத்தம் விலகியதைக் கண்டேன், பிறகு மூடுபனியும் விலகியது, பிறகு கண்களில் ஒளியைக் கண்டேன், இருதயத்திலிருந்து வந்த புண்சிரிப்பையும் கண்டேன், கென்னிடம் அதுபற்றி சொன்னேன், அது நான்தான், அது தேவனிடமிருந்து வந்த மேலாள ஈவு," என்று அவர் சொன்னார்.

**டாக்டர் மைக்கேல் எஸ்லே:...**கேன்னுக்கு ஜோனி மீது அக்கறை, சின்டிக்கு என் மீது அக்கறை, உங்களுக்கு உங்கள் நண்பர்கள் மீதோ, தாய் மீதோ, தகப்பன் மீதோ, சகோதரி அல்லது குழந்தை மீதோ அக்கறை இருக்கும், அதற்கான ஒரு ஊழியம் உள்ளுது. அதற்கு 1,2,3, என்ற மதிபபெண் கொடுக்க முடியாது. ஆனால் அது தேவன் தந்த

ஊழியம், பிறர் மீது அக்கறை காட்டுபவர்களுக்கான ஊழியம். அவரது பார்வையில் இது மேலானது, வல்லமையானது. ஜோனி மீது கென் காட்டும் அக்கறை, சின்டி என் மீது காட்டும் அக்கறை, ஆகியவற்றின் மூலம் அது மக்களை சென்றடைகிறது.

**அறிவிப்பாளர்:...**இன்று எனது விருந்தினர்கள், டாக்டர் மைக்கேல் எஸ்லே, அவர் மூடி பைபிள் நிறுவனத்தின் தலைவர், மற்றும் அவரது மனைவி சின்டி, அதோடு, ஜோனி மற்றும் நண்பர்கள் நிறுவனர் ஜோனி எரிக்சன் டாடா மற்றும் அவர் கணவர் கென்னும் உள்ளனர். இந்த முக்கிய நிகழ்ச்சியான ஜான் அன்கர்பர்க் நிகழ்ச்சியில் எங்களோடு இணையுங்கள்.

*****

**டாக்டர். ஜான் அன்கெர்பெர்க்:...**இந்த நிகழ்ச்சிக்கு வரவேற்கிறோம். நீங்கள் விரும்பும் யார் மீதாவது அக்கறை காட்டுகிறீர்களா, அது, உங்கள் தாயாராகவோ, தந்தையாகவோ, அல்லது உங்கள் கணவராகவோ, உங்கள் மனைவியாகவோ அல்லது ஒரு குழந்தையாகவோ, உடல் ஊனமுற்றவராகவோ, வேறுயாரோ ஒருவராகவோ கூட இருக்கலாம், அதைப் பற்றி இப்போது பேசுகிறோம். ஆதை நீங்கள் சிறிது காலம் செய்யலாம், அல்லது தொடர்ந்து செய்யலாம், அப்பழபட்ட ஒரு சூழ்நிலையில் உங்கள் வாழ்வு என்ன ஆகும் என்று யோசிப்பீர்களா? அது உங்களை துன்புறுத்தலாம், அதனால் மன அழுத்தமும் வரலாம், அதைப் பற்றி நாம்

பேசப்போகிறோம். இப்பொழுது துயரத்தில் உள்ளவர்களை பாதுகாப்பவர்கள் நமமோடு உள்ளார்கள். அவர்களை நீண்டகாலமாக அவர்கள் பாதுகாம்து வருகிறார்கள். அவர்கள் என்ன ஒரு அனுபவம் அடைந்தார்கள், தேவனைப்பற்றி என்ன அறிந்துகொண்டார்கள், தேவன் அவர்களுக்கு எப்படி உதவினார் என்பதைப் பற்றி பேசுவார்கள். எனவே தேவன் உங்களுக்கும் உதவுவார். இங்குள்ள எனது விருந்தினர்கள், டாக்டர் மைக்கேல் எஸ்லே, அவரது மனைவி சிண்டி எஸ்லே, கென் டாடா, ஜோனி எரிக்சன் டாடா ஆகியோர். ஊங்களுடைய புத்தகம் பற்றி சொல்கிறேன் சிண்டி, அது ஒரு மகத்தான புத்தகம், டான்சிங் வித் த ஒன் யூ லவ்."

அந்த புத்தகத்தின் முன்னுரையில் அருமையான வார்த்தைகளை நான் பார்த்தேன், "மைக்கேல், உங்களது தியாக உணர்வுள்ள அன்பிற்கு நன்றி! அது எனது சுயநலமான வாழ்விலிருந்து என்னை விடுபட வைத்துள்ளது. உங்களை நான் எங்கும் பின்தொடர்வேன்." எங்கு அவர், யாரை பின்தொடர்ந்தார் என்பது உற்சாகமானது. அவர்தான் மூடி பைபிள் நிறுவனத்தின் தலைவர். அவர் நாடு முழுவதும் நடைபெறும் கூட்டங்களில் பேசுகிறார். ரேடியோவில் பேசுகிறார். பள்ளியில் பிள்ளைகளுக்கு ஆலோசனை வழுங்குகிறார். ஆவர் தலைமையில் மூடி ரேடியோ நெட்வர்க் செயல்படுகிறது. அதெல்லாம் சரி. ஆனால் அவரது வேதனை, அது மேலும் மோசமடைந்தது வருகிறது. அதோடு நாம் நிறுத்திக்கொள்வோம். அவர் தொடர்ந்து பயணம் செய்யும்போது

ஏற்படும் வேதனையை நீங்கள் அறிந்துகொள்ளப்போகிறீர்கள், அதைப்பற்றி இப்போது உங்களால் சொல்லமுடியுமா?

**சின்டி ஈஸ்லே:**...மைக்கேல் முதுகு வலியோடு மூடிக்கு வந்தார், அவர் தொடர்ந்து பயணம் செய்ததால், அந்த வலி அதிகமாக இருந்தது, அதுதான் உண்மை, கடந்த பல வருடங்களாக, அதாவது 10 அல்லது 12 வருடங்களுக்கு முன்பாக, அந்த வலியிலிருந்து விடுபட பல சிகிச்சைகளை அவர் செய்தார், அறுவை சிகிச்சை செய்தார் மற்றும் பல மருந்துகளை உட்கொண்டார், ஆனாலும் அந்த துன்பத்தை அவர் தொடர்ந்து மேற்கொள்ள வேண்ழயிருந்தது. ஒவ்வொரு முறையும் ஏதாவது செய்தார், அது மருத்துவ சிகிச்சையாகவோ, அறுவை சிகிச்சையாகவோ, புதிய மருந்தாகவோ இருக்கும். அப்போது நான் நினைப்பேன், தேவனே அவரது வலி நீங்கட்டும், அது முழுவதுமாய் தீரட்டும், என்று. ஆனால், அவர் கடைசி அறுவை சிகிச்சை வரையில் அது நீங்கவில்லை, அவரது வலி தீரவில்லை, பின்னர் அவர் மூடியை சந்தித்தார், பிறகு நடந்தது என்ன என்று தெரியுமா? சொல்கிறேன். இது ஒரு புதிய கோணம், அவர் வாழ்நாள் முழுவதும் வலியோடு இருப்பார்.

**ஆன்கர்பெர்க்:**..சரி மைக்கேல், உங்களுக்கு ஏற்பட்டது என்னவென்று பிறருக்கு தெரியாது. அதை சுருக்கமாகக் கூறுங்கள், நான் மீண்டும் இங்கே வருகிறேன்.

**டாக்டர் மைக்கேல் எஸ்லே:**...எனக்கு ஏற்பட்ட வியாதியின் பெயர் டீ ஜெனரேடிவ் டிஸ்க் டிசீஸ். ஆதனால் முதுகு தண்டில் வலி ஏற்படும், எந்தப் பக்கமுத் திரும்ப முடியாதபடி இருக்கும். உங்களுக்குள் இருக்குமு; எலும்புகள் ஒன்றோடொன்று உரசி, வலி அதிகரிக்கும். அந்த வலியைபற் பற்றி வார்த்தைகளால் விளக்க முடியாது. ஜோனியைப் போல், அந்த வலியை பற்றி நான் கூற முடியாது. உடல் சூடாக இருக்கும். களைப்பு இருக்கும். 24 மணிநேரமும் அந்த வலி தொடர்ந்து இருக்கும்.

**ஆன்கர்பெர்க்:**..ஒரு அளவுகோல் மூலம் அதைப் பற்றி விளக்கம் தரமுடியுமா?

**டாக்டர் மைக்கேல் எஸ்லே:**...ஆறு அல்லது ஏழு இருக்கும். ஜோனியிடம் கூறுவேன், ஐந்துக்கு கீழே இருந்தால் அது இன்பமான நாளாக இருக்கும். அந்த வலி காரணமாக பிறரை நாம் தொந்தரவு செய்யக் கூடாது. அதனால் அதை எப்படி கையாள்வது என்பதை முதலில் நாம் அறிய வேண்டும். அதைக் கட்டுப்படுத்துவது நல்லது.

**ஆன்கர்பெர்க்:**..உண்மை, அவர் மூடி நிறுவனத்தின் தலைவர், அவரது உடல் வலி தீரும் நேரத்தில் அவருடன் மதிய உணவு சாப்பிட்டிருக்கிறேன். நான் சொன்னேன், மைக்கேல், அங்கே நீங்கள் இருக்கக்கூடாது. அதை தொடர்ந்து செய்யக்கூடாது, அந்த அட்டவணை

சரியாக இருக்காது. அதை எப்படி செய்கிறீர்களோ தெரியாது.” உங்கள் வீட்டில் என்ன சொல்வீர்கள்?

**சின்டி ஈஸ்லே:**...ஆவர் மருத்துவ நிபுணரும் அதையே சொன்னார். அதை நீங்கள் தொடர்ந்து செய்யக் கூடாது. அது உங்களை கொல்லுமு; என்று. அதைப் புரிந்துகொள்ள சில காலம் ஆனது. அப்போது நாங்கள் வடக்கு வெர்ஜீனியாவில் இருந்து சிக்காகோ நகருக்கு வந்தோம். அது எங்கள் குடும்பத்திற்கு ஒரு சவால் ஆகும். ஆதை நான் புரிந்து கொள்ள சிலகாலம் ஆனது. அதை செய்யக்கூடாதென்று தெரிந்து கொண்டேன். அதில் ஏதோ ஒன்று நடக்கப்போவதை நான் நினைத்துப் பார்த்தேன். மூடிக்காக பல்வேறு விஷயங்கள் செய்யவேண்டியிருந்தது. அதனால் தேவன் அவரிடமிருந்து எளிதில் எங்களை அனுப்பமாட்டார் என்பது எங்களுக்கு புரிந்தது. மூடிக்காக அடுத்த கட்ட வேலையை பார்ப்பதை தேவன் விரும்பினார் என்பதை நாங்கள் புரிந்துகொண்டோம். பிறகு அது வெளிப்படையாகவே எனக்கு தெரிந்தது. அது என் சுயநலம் என்பதும் தெரிந்தது.

**ஆன்கர்பெர்க்:**...அது எப்போது மாறுபட்டு வந்தது?

**சின்டி ஈஸ்லே:**...அது நடந்தது அறுவை சிகிச்சைக்கு பின்பு. அவர் இரண்டுமுறை அறுவை சிகிச்சை செய்தார். எந்த இடத்தில் நாங்கள் இருந்தாலுமு; அந்த அறுவை சிகிச்சைந டந்தது. எனவே மறுபடியும் அவர் அதை செய்ய முடியாது, வேறு சிகிச்சைக்கான வழியை

பார்க்கவேண்டியதுதான்.” ஏன்றேன். இரண்டு அறுவை சிகிச்சைகள் சிக்காகோ நகரில் நடந்தது. அப்பொழுது தான் அந்த எண்ணம் எனக்கு வந்தது. பிறகு எனக்கு ஒரு எண்ணம் தோன்றியது, அதாவது அந்த ஒரு வேதனையுடன் அவர் எங்கள் நிறுவனத்தின் தலைவராக இனியும் இருக்க முடியாது என்று எண்ணினேன்.

**ஆன்கர்பெர்க்:**...உங்கள் வாழ்வு மாறியது பற்றி கூறுங்கள்.

**சின்டி ஈஸ்லே:**...பிறகு மைக்கேலும் நானும் ஒரு முடிவு எடுத்தோம். அதாவது முழு நேர வேலைக்கு போவதாக முடிவு செய்தோம். அந்த ஊழியத்தில் நான் எழுதினேன், பேசினேன், அதை வளர்த்தேன். பிறகு நான் ரியல் எஸ்டேட் துரைக்கு போனேன். ஆப்போதும் ஊழியம் தொடர்ந்தது. அதற்கு ஒரு காரணம் இருந்தது, ஒரு கால கட்டத்தில் அவரால் வேலை செய்ய முடியாது, அப்பொழுது எங்களுக்கு வருமானம் தேவைபடும் நிலை ஏற்படும். அதனால் தான் அப்படி ஒரு முடிவை எடுத்தோம். இன்னொரு விஷயம், அவரது வேதனையை நான் அக்கறையோடு கவனித்தேன். ஒருமுறை மைக்கேல் இரவில் வந்தபோது அவரை கூர்ந்து கவனித்தேன். அவரது கண்ணையும் நடையையும் பார்த்தேன். அவர் நடக்கமுடியாமல் தாங்களாய் நடந்ததால், அவருக்கு நான் வழிவிடுவது அவசியமானது. பிறகு அவர் பிள்ளைகளிடம் சொன்னேன், அப்பாவுக்கு இது நல்ல நாள் இல்லை, உங்கள் பிரச்சனைகளை சொல்ல இது சரியான நேரமில்லை. முதலில் அவரது வேதனை நல்லபடியாக நீங்கட்டும். இதில் நான் செய்வதற்கு

எதுவும் இல்லை. இது எனது கடினமான ஒரு சூழ்நிலை, என்னால் உதவ முடியாது என்றேன்."

**ஆன்கர்பெர்க்:..**அவரது வேதனை சிலநேரங்களில் குறைந்திருக்க வாய்ப்பு உண்டு, அப்போது அவர் என்ன செய்வார்,

**சின்டி ஈஸ்லே:...**அவர் சற்று இளைப்பாறுவார். அவர் கீழே உள்ள பகுதித்து செல்வார். அல்லது டிவியை ஆன் செய்து, அதில்வரும் செய்தியை பார்ப்பார். அந்த ஒரு சூழ்நிலையில் அவரது வேதனையை மறப்பதாக, அவரது செயல்கள் , பார்ப்பவர்களுக்கு தோன்றும்.

**ஆன்கர்பெர்க்:..**அதைப்பற்றி நீங்கள் நினைப்பது என்ன?

**சின்டி ஈஸ்லே:...**உள்ளபடி, பயப்படுவேன், ஏனென்றால் அவருக்கு என்னால் உதவ முடியாது. அப்போது அவரைப் பார்த்து இப்படி சொல்வேன், உங்களது வேதனையை ஒரு நாளோ, ஒரு வாரமோ, ஒரு மாதமோ நான் ஏற்கிறேன் என்பேன்."

அதை தருவதற்கு முயற்சிக்கிறேன்.

**சின்டி ஈஸ்லே:...**நீங்கள் செய்வீர்கள். அவருக்கு சுகம் வழங்குவதை நான் மகிழ்ச்சியாக ஏற்பேன். எங்கள் குழந்தைகளுக்கும் நாங்கள் பழகும் பிற நண்பர்களுக்கும் அதைப் புரிந்து கொள்வுது கடினம். பொதுவாக மைக்கேலின் நடை உடை பாவனைகளையும் அவரது கண்களையும் பார்ப்பவர்களுக்கு அவர் நன்றாக இருப்பது போல

தெரியும். ஆதனால் அவரது உள் வேதனை, பார்ப்பவர்களுக்கு தெரியாது. ஏனென்றால் அவர் எதையும் என்னிடம் மட்டுமே சொல்வார். எனவே வேறு யாருக்கும் அது தெரியாது. ஆனால் அவரின் வேதனையை ஒரு நாளாவது ஏற்க நான் விரும்புகிறேன்.

**ஆன்கர்பெர்க்:**...அது சரி, ஒருநாள் அவர் ஒரு வண்டியில் அமர்ந்திருந்தார். அவர் கண்களில் இருந்து கண்ணீர் வந்தது. அதைப் பற்றி சொல்லுங்கள். அப்போது அவர் என்ன சொன்னார் என்று கூறுங்கள்.

**டாக்டர் மைக்கேல் எஸ்லே:**...முதலாவது அறுவைசிகிச்சையின் போது, ஒரு குழந்தையை போல அழுதேன், அப்போது எப்Nபுhதும் இல்லாத அளவிற்கு வலி இருந்தது. நிறைய மருந்துகள் சாப்பிட்டேன். பக்க விளைவுகள் இருந்தன. ஜோனியிடம் அது மிகவும் கடுமையானது என்று கூறினார். இனி என்ன செய்வது என்று புரியவில்லை. நான் எப்படி வாழப் போகிறேன் என்றும் தெரியவில்லை என்றார்." அவரிடம் நான் இப்படி சொன்னேன், இந்த உலகில் நாம் எப்படி வாழ்வோம் என்பது யாருக்கும் தெரியாது. அவர் அதை மறந்திருக்கலாம், பிறகு அவர் என்னிடம் சொன்னார், அது என் மனதில் கொழுந்துவிடடு எரிகிறது. நான் பழையதை நினைக்கிறேன், தேவன் இதுநாள் வரை விசுவாசத்தோடு உள்ளார். பிறகு எதிர்காலத்திலுமு; அவர் ஏன் அப்படி இருக்கமாட்டார்? என்றார்.

**ஆன்கர்பெர்க்:..**ஆமாம், அதைப் பற்றி நீங்கள் அதிகம் சிந்திப்பதில்லை, அதனால்தான் அதைப் பற்றி நினைப்பதும் இல்லை. அது உண்மைதானோ? அதாவது, அப்படித்தான் நீங்கள் எப்போதும் நினைக்கிறீர்களா?

**சின்டி ஈஸ்லே:...**அதுதான் சரி. ஏனக்கு சந்தேகம் வரும்போதெல்லாம் இப்படி பாடுவேன், உமது விசுவாசம் மிகவும் மகத்தானது." அதுதான் உண்மை. அது எவ்வளவு ஒரு அருமையான வார்த்தை தெரியுமா, உமது விசுவாசம் மகத்தானது, என் தேவனே, பிதாவே." அதிலிருந்து விலகிச் செல்வதற்கு வழியே இல்லை. அது மாறாத வரையில் உங்கள் உணர்ச்சிகள் மாறாமல் நிலையாக இருக்கும். அந்த ஒரு நிலையில் இருந்து மாறுபட மாட்டீர்கள்." அவரது விசுவாசம் மகத்தானது, அவரது செயல்கள் மகத்தானது, ஒவ்டிவர்ரு நாளும் புதிய கிருபையை நான் பார்க்கிறேன்." அது என்னைப் பொறுத்தவரையில் ஒரு உண்மைதானே? எனது மகத்தான பயம், மகத்தான வேதனை, இரவில்தான் வரும். நான் ஒவ்வொரு காலையும் புதிய கிருபையைப் பார்க்கிறேன்." அவரது கரங்கள் அதை எனக்கு தந்தது. என் வாழ்வில் அதுவே உண்மை. தேவன் இல்லாமல் நமது வாழ்வில் எந்த ஒரு மாற்றமும் ஏற்படாது. தேவனே, நீர் என் மீது வைத்திருப்பது மகத்தான விசுவாசம்."

**ஆன்கர்பெர்க்:..**இது போன்ற வேதனையில் இருந்து மீளமுடியாத பலர் உள்ளனர், அவர்களுக்கு நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? பலருக்கு

குணமாகவில்லை. அப்படிபட்ட நிலையில் உள்ளவர்களுகு;கு என்ன ஆலோசனை சொல்கிறீர்கள், அவர்கள் என்ன செய்வது, அவர்களுக்கு தினமும் மகிழ்ச்சி எப்படி வாய்க்கும்?

**சின்டி ஈஸ்லே:**...உள்ளபடியே, சில நாட்கள், மகிழ்ச்சி இருக்காது. இயேசுவுடன் நாம் நெருக்கமாக நடந்து கொண்டால் நமக்கு மகிழ்ச்சி கிடைக்கும். நமக்கு மகிர்;ச்சி கிகைட்க ஒரே வழி அதுதான்.எனக்கு அதிலே அனுபவம் உள்ளது. ஆனால், அடுத்த ஒரு வேதனைக்காக அவரை நாம் நாடக்கூடாது. இது ஒரு புதிய நிலைமை என்பதை நாம் உணரவேண்டும், அது ஒன்று தான் சரி. அது ஏன் தெரியுமா, நாம் நன்றாக இருப்பது நம்மால் என்று நினைக்ககூடாது. அது நடந்து இருப்பது தேவனின் கிருபையால் தான். என்னுடை யபாதையில் எல்லாம் அவர் இருக்கிறார்.என்னிடமும், மைக்கேலிடமும் அவர் விசுவாசமாக இருப்பதால், நாங்கள் நன்றாக உள்ளோம். அதுவே உண்மை. நான் தேவனின் சமாதானத்தோடும், அவரது பிரசன்னத்தோடும் உள்ளேன். அதைவிட வேறு என்ன வேண்டும்?

**ஆன்கர்பெர்க்:**..இது மகத்தான விஷயம். நாம், சிறந்த நான்கு மக்களோடு பேசிக்கொண்டிருக்கிறோம். டாக்டர் மைக்கேல் எஸ்லே, அவர் மனைவி சின்டி, கென் டாடா, அவருடைய பிரியமான மனைவி ஜோனி எரிக்சன் டாடா. கென், வழக்கமான ஒரு விஷயம்பற்றி பேசுகிNறுன். இதை பலர் பார்க்கிறார்கள். ஒவ்வொரு நாளும் நீங்கள் ஜோனி மீது எப்படி அக்கறை காட்டினீர்கள். அதை மற்றவர்கள் அறிய

விரும்புகிறார்கள். ஜோனி, அந்த ஒரு வேதனையிலும் உங்களது மனஉறுதியை எப்படி நீங்கள் இழக்காமல் இருந்தீர்கள், உங்கள் வாழ்வில் ஏற்படும் பல பிரச்சனைகள் பற்றி நாங்கள் பேசப்போகிறோம். ஒருசிலருக்கு ஏற்படும் பிரச்சனைகளை நீங்களும் கையாள வேண்டி வரலாம், நீங்கள் ஒருவரை ஒருவர் நேசிக்கிறீர்கள். தேவனை நேசிக்கிறீர்கள். அந்த ஒரு சூழ்நிலையில் நிஜ வாழ்வில் சிலசோதனைகள் வரக்கூடும். அது உங்களைக் கொல்லும். அது இருவருக்கும் பொருந்தும். ஒரு கட்டத்தில் உங்கள் இருவருக்குமே மன அழுத்தம் ஏற்பட்டிருக்க கூடும். அது ஏன், அது ஏனென்று நமது பார்வையாளர்கள் அறிய விரும்புகிறார்கள்.

**கேன் டாடா:**…ஜான், ஒருநாள் பொழுது முழுவதிலும் சில வழக்கமான காரியங்கள் வீட்டில் நடைபெறும். துணியை அலசி, பிறகு காயவைக்க வேண்டிவரும். உயவு தயார் செய்ய வேண்டியிருக்கும். ஒரு காலகட்டத்தில் அதை எல்லாம் என் மனைவி செய்வார் என்று நினைப்பேன். ஜோனி, ஒரு ஊனமுள்ளவர், எனவே அந்தவீட்டு வேலைகளை எல்லாம் நானே செய்து முடிப்பேன். மருந்துகளை வாங்குவேன், அதன் மூலம் ஜோனி அதை சாப்பிடுவதற்கு ஆயத்தமாக இருப்பார். பின்னர் வழக்கம் போல இரவு நேர பயம் எனக்கு வரும். ஆனாலும் இருவரும் அக்கறையோடு இருப்போம். கழிவறை விவகாரங்கள் வழக்கமாக நிடைபெறும். அதுவே உண்மை. ஒவ்வொரு இரவிலும் கூட அது நடந்தபடியே இருக்கும். முதலாவது வருடத்தில்

அது கடினமாக இருந்தது என்று சொல்வேன், பின்பு அது எனக்கு பழகிவிட்டது. ஆனால் அது மிகவும் கடினமான வேலையாக இருந்தது. ஜோனியும் நானும் பாதி இரவிலும் எழுந்து அந்த பணிகளை செய்வோம் என்பதே உண்மை. அதாவது தலையணையை சரிசெய்து அவர் கால்களை சரியானபடி நான் வைப்பேன். அதை இருமுறை செய்தால், அது சரியாகிவிடும். பிறகு நான் பள்ளிக்கு போகவேண்டிய நேரம் வரும், இரவுநேரம் உறங்குவதற்காக வருவேன், ஒருசமயம் நடந்தது என்ன தெரியுமா? எங்கள் திருமணம் நடைபெற்றதும் ஜோனிக்கு அந்த வேதனை அதிகரிக்கத் தொடங்கியது. அவருக்கு உதவுவதை நான் பல முறை செய்யவேண்டியிருந்தது. ஒரு கட்டத்தில் நான் நினைத்தேன், இதை இனியும் செய்ய முடியாது என்று.” அது போகபோக எனக்கு அலுத்துவிட்டது. அது எங்கள் உறவையே பாதித்தது.

**ஆன்கர்பெர்க்**:..பிறகு என்ன செய்தீர்கள்?

**கேன் டாடா**:...ஒரு கட்டத்தில் பிறரிடம் நான் உதவும்படி கேட்டேன். அது ஏனென்றால், அதை என்னால் மட்டும் செய்யமுடியவில்லை. அதற்காக பிறர் உதவியை நான நாடினேன், அதை மோசமாக யாரும் நினைக்கக்கூடாது. எனக்காக சிலநேரம் நான் ஒதுக்கினேன், உடற்பயிற்சி செய்தேன், வழக்கமான பணிகள் செய்வதைவிட்டு வில மணிநேரம் நண்பர்களோடு இருந்தேன், அவர்கள் தினமும் நான் வருவதை உறுதிசெய்தார்கள். அதிலே சிலர் இருந்தார்கள், அவர்கள்

கிறிஸ்துவின் பிரியத்திற்கு உரியவர்கள். அநேக நேரங்களில் நான் கிறிஸ்துவை நெருங்கி வந்தேன். எனக்கு எல்லாவற்றிலும் மேலாக இயேசு இருந்தார்.

**ஆன்கர்பெர்க்:**..உங்கள் ஈடுபாட்டால் அந்த காலகட்டத்தில் எப்போதாவது தேவன் உங்களோடு பேசி இருக்கிறாரா, அவர் உங்களிடம் சொன்னது என்ன?

**கேன் டாடா:**...பேசினார். அதைப பற்றி நான் சொன்னால் இதை கேட்பவர்கள் எப்படி புரிந்துடிகாள்வார்களோ என்று எனக்கு தெரியாது. தேவன் குரலை நான் கேட்டேன். ஒரு சத்தமான குரலை நான் கேட்கவில்லை. ஒருமுறை நான் மீன்பிடிக்க போன போது என்று நினைக்கிறேன், அப்போது ஒருவர் என்னிடம் கூறினார், வெளியே சென்று தேவன் குரலை கேள் என்று. முதன்முதாக தேவன் குரலை நான் கேட்டேன். உனக்கு நான் அளித்த மேன்மையான பரிசு ஜோனி, அவர் மீது அக்கறை காட்டு" என்றார் தேவன்.

**ஆன்கர்பெர்க்:**..அப்போது நினைத்தது என்ன? நீங்கள், அவர் மீது ஏற்கனவே தான் அக்கறை காட்டியுள்ளீர்களே.

**கேன் டாடா:**...அந்த நேரத்தில் அது என்ன என்று எனக்கு புரியவில்லை, உள்ளபடியே, நான் அவர் மீது அக்கறை காட்டுகிறேன், தேவனே வேறு நான் எதைச் செய்வதற்கு நீர் விரும்புகிறீர், சில

வருடங்கள் கழிந்தது, ஒரு சமயத்தில் முடிவாக அதைப் பற்றி நான் அறிந்தேன்.

**ஆன்கர்பெர்க்:..**என்ன நடந்தது?

**கேன் டாடா:...**அப்போது ஜோனிக்கு புற்றுநோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அற்த ஒரு நேரத்திலே ஒரு உண்மையை நான் உணர்ந்தேன். என் நல்ல மனைவியை நான் இழப்பேனோ என்று எண்ணினேன். ஆந்த நேரத்தில் தேவன் சொன்னதை நான் எண்ணிப்பார்த்தேன், தேவனே, என்னிடம் நீர் சொன்னதை இப்போது நினைக்கிறேன், ஜோனி, எனக்கு அளிக்கப்பட்ட மேலான பரிசு, அவளைப் பாதுகாத்திடு என்றீர்களே!

**ஆன்கர்பெர்க்:..**அது எப்படி நடந்தது கென், அதாவது திடீரென்று உங்களுக்கு ஒரு பெரிய மாற்றம் நிகழ்ந்தது, மற்றவர்கள் பார்த்த அந்த மாற்றம் என்ன?

**கேன் டாடா:...**என் மனைவிக்காக போராடப்போகிறேன் என்பது தான் அந்த மாற்றம். புற்றுநோய்க்கான போராட்டத்தில் இருவரும் இணைந்து சென்றால், அந்த பயணத்தில், அவளது வழக்கறிஞனாக நான் இருப்பேன். அவளது எல்லா பணிகளுக்கும் நான் தான் பொறுப்பாளனாக இருப்பேன். அதைப் பற்றி டாக்டர்களிடம் கலந்து பேசுவேன், நர்சுகள், ஊழியர்கள் ஆகியோரிடமும் பேசுவேன். ஏல்லா முடிவுகளையும் நான் எடுக்கும் அதே சமயத்தில், ஒரு விஷயத்தை

நான் உறுதி செய்வேன், அது என் மனைவியின் நலனுக்காக எடுக்கப்படுகிறதா என்று. அந்த ஒரு இக்கட்டான நேரத்தில் , அந்த ஒரு சூழ்நிலையில், நானும் ஜோனியும் நெருங்கி வந்தோம். அப்போது அவளுக்காக நான் போராடப்போவதை முதன்முதலாக அவள் உணர்ந்தாள்.

**ஆன்கர்பெர்க்:..**ஏதோவொரு சம்பவம் நடக்கிறது என்பதை எப்போது நீங்கள் புரிந்துகொண்டீர்கள்?

ஜோனி எரிக்சன் டாடா:..அவரது மனஅழுத்தம் விலகியது. அவர் பழைய நிலைக்குத் திரும்பினார். அவரது கண்களில் ஒரு ஒளி தெரிந்தது. இருதயத்தில் இருந்து வெளிவந்த புன்முறுவலை பார்த்தேன். அப்போது கென் மனதில் ஒன்று தோன்றியிருக்கும்;, அதுதான் மேன்மையான பரிசு" என்று தேவன் அவரிடம் சொன்னது. அது அவர் நடத்தையில் தெரிந்தது. எனது வேதனைக்கு அவர் உதவியாக இருந்தார். ஏனென்றால் புற்றுநோயால் எனக்கு வந்த வேதனை அது, அதை நல்லவிதமாக அவர் கையாண்டார். அப்பொழுது கென்னை பார்த்தேன். என் நினைவில் உள்ளவரை என்ன நடந்தது என்று சொல்கிறேன், சின்டி கூறியதுபோல் யாரும் உதவ முடியாத ஒரு சூழ்நிலை, என்ன நடக்குமோ என்ற ஒரு குழப்பம், எதையும் செய்ய முடியாத ஒரு நிலை, எனக்கு பிறர் உதவ முடியாத ஒரு நிலை, யாரும் அந்த சுமையை தாங்க முடியாத ஒரு நிலை, அந்த ஒரு சூழ்நிலைதான் அவர் இயேசு கிறிஸ்துவை நாடச் செய்தது. அவர்

அப்போது செய்ததுதான் சரி. இயேசுவிடம் அவர் இப்படி சொன்னார், என்னால் இனிமேல் முடியாது, அக்கறை காட்டவும் இயலாது. என் நிலைமை அப்படி, எல்லாவற்றையும் என்னால் செய்ய முடியாது. இருந்தாலும் நான் மனந்தளரவில்லை. எனவே ரட்சகரின் கரங்களில் என்னை ஒப்படைப்பதுதான், நல்லதாக இருக்கும் என்றார். கென்னிடம் அதைப் பார்த்தேன்.

**ஆன்கர்பெர்க்:..**உங்கள் புத்தகத்தில் உள்ள ஒருகதை எனக்கு பிடிக்கிறது. அவரை விமான நிலையத்துக்கு அழைத்துச் சென்றீர்கள். தேவன் அவரை பாதுகாத்திடு என்று சொன்ன பிறகு அதை செய்தீர்கள். எனவே அவரை பாதுகாக்க ஆயத்தமாக இருந்தீர்கள், அப்போது ஒரு பயணம் அவருக்கு அவசியமானது. பிறகு லாஸ் ஏஞ்சல்ஸ் வரை பயணம் செய்தீர்கள். அங்கே இறங்கிய போது வண்டியிலிருந்து உங்கள் பெட்டி தவறி கீழே விழுந்தது, அது அவர் காலடியில் விழுந்தது. அவரது காலில் அடிபட்டிருக்கலாம் என்று நீங்கள் அஞ்சினீர்கள், ஏதொ ஒரு தவறு நடந்துவிட்டதாக அப்போது உணர்ந்தீர்கள், பிறு என்ன நடந்தது?

**கேன் டாடா:…**சோல்கிறேன் ஜான், முதலில் ஜோனி வண்டியின் முன்பகுதியில் அமரவில்லை, பின்னால் இருந்தார். அவரை எப்போதும் ஒரு புறமாகத்தான் உட்கார வைப்போம், ஏனென்றால் அது போன்ற ஏதாவது நடக்கலாம் என்பதால், அப்போது அவர் சொன்னார், ஓகே, கென், என்னால் முன்னால் வந்து உட்கார முடியும், அந்த

இருக்கையில் சாய்ந்தபடி வெளியே உள்தை நான் பார்ப்பேன், நான் சொன்னேன், ஜோனி அது ஒரு சரியான யோசனையில்லை." என்றேன். அது சரியில்லை என்று முதலில் நான் கூறினேன். பிறகு அந்த ஒரு விஷயத்தில் என் முடிவை மாற்றிக்கொண்டேன். சரி, என்றேன். அந்த ஒரு விஷயத்தில் அவளுக்கு நான் விட்டுக்கொடுத்தேன். பிறகு முன் இருக்கையில் அவரை சாய்வாக அமர்த்தினோம். சுpல இடங்களில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு, திடீரென்று பிரேக் போடும்படியாக இருந்தது, அப்பழ பிரேக் போடும்போது, நான் ஏற்கனவே கூறியபடி பெட்டி கீழே விழுந்தது. ஜோனியை {hன் பின்புறமாக பிடித்துக்கொண்டார், ஆனால், அவரது வீல்சேர் முன்னே நகர்ந்துவிட்டது, பிறகு அவரது கால் அந்த வீல் சேரின் கீழே சிக்கிக்கொண்டது.

அப்போது வேனில் இருந்த எங்கள் நண்பர் சொன்னார், கென், ஜோனிக்கு நடந்ததை பார் என்றார். அப்போது நான் சொன்னேன், இப்Nபுhது என்னால் எதுவும் செய்ய முடியாது என்று. பிறகு ஒரு ஒதுக்கு புறமாக வேனை நிறுத்தினோம். ஜோனியை சரியாக அமரவைத்தோம். ஜோனி எப்போதுமே தன் வேதனையை வெளிபடுத்துவாள். அவரது பாதி முகம் வியர்த்து இருந்தது. அவரை சரியானபடி அமர்த்திய பின்பு நாங்கள் கேட்டோம், ஜோனி, மேற்கொண்டு வியர்கிறதா என்று. அவர் இல்லை என்றார், நான் சொன்னேன், ஜோனி நாம் வீட்டிற்கு போவதுதான் நல்லது என்றேன்.

அந்த பயணத்தின்போது ஏற்பட்ட சூழ்நிலையின் காரணமாக Nகூhனி எங்களைப் பார்த்து சொன்னார், இந்த பயணம் எனக்கு தேவையில்லை என்று நினைக்கிறேன் என்றார். எனவே, நாங்கள் திரும்ப விமான நிலையம் சென்றோம். வுpமான நிலையம் சென்றதும் ஜோனியிடம் மீண்டும் வியர்கிறதா என்றேன். அவர் வியர்க்கவில்லை என்று கூறினார். பிறகு விமானத்தில் ஏறினார். தனது கவலையை எங்களிடம் கூறினார்.

**ஆன்கர்பெர்க்**:..பல்டிமோர் வரை நடந்தது. அந்த விமானம் வெகுதூரம் பறந்து சென்றது, அந்த நேத்தில் நீங்கள் ஒன்றை உணர்ந்தீர்கள். அதாவது ஜோனிக்கு வியர்க்கிறது என்று, அவரது கால்கள் வீக்கம் அடைந்தன, அப்போது ஒரு பெரிய பிரச்சனையில் இருப்பதாக நீங்கள் கூறினீர்கள். அவரது காலில் ஐஸ் வைக்கப்பட்டது. பல்டிமோர் வந்தீர்கள், பிறகு எங்கே சென்றீர்கள்?

ஜோனி எரிக்சன் டாடா:..இந்த நிகழ்ச்சியை பார்ப்பவர்களுக்கு ஒரு விஷயத்தை தெளிவுபடுத்துகிறேன், அந்த பயணத்தில் கென் என்னுடன் இல்லை. என்னை அவர் விமான நிலையத்தில் விட்டு விட்டார், பிறகு விமானத்தில் என் நண்பரோடு நான் இருந்தேன். அவர்கள் பிடபிள்யு அவசர சிகிச்சையை அழைத்தார்கள், ஆன்னி ஆரன்டெல் பவுன்டி பொது மருத்துவமனை, ஒரு ஆம்புலன்சை அனுப்பியது. என்னை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். என் காலை எக்ஸ்ரே எடுத்தார்கள். அதில் கால் முறிந்திருப்பது தெரிந்தது. அது காலை

2மணியளவில் நடந்தது, பிறகு எக்ஸ்ரே ரிசல்ட் எங்களுக்கு வழங்கப்பட்டது. அப்போது ஒரு நர்ஸ், செல்போனில் அழைத்தது எனக்கு நினைவில் உள்ளது, நான் கென்னிடம் பேசினேன். அந்த ரிப்போர்ட்டை அவரிடம் கொடுக்க விரும்பினேன். அப்போது அவர் என்னிடம் சொன்னது இதுதான், நான் புறப்பட்டுவிட்டேன். அடுத்த விமானத்தில் வருகிறேன், கவலைப்படாதே ஜோனி, நாளை நான் உன்னோடு இருப்பேன் என்றார். நான் சொன்னேன், ஓ, கென் பரவாயில்லை, நீங்கள் வரவேண்டாம் என்று. அவரது வார்த்தைகள் கேட்பதற்கு மனதுக்குள் இனிப்பாக இருக்கும், என் கணவர் என்னோடு இருக்கவே விரும்பினார். இருந்தாலும் என் மனதில் பட்டதை சொன்னேன், அந்த அளவுக்கு நீங்கள் முயற்சி எடுக்க வேண்டாம் என்றேன்." ஆனால் எனக்குள் நான் சொன்னேன்? வருக வருக என்று. அவர் என்னோடு இருக்க விரும்பியது இப்போதும் கூட எனக்கு உணர்ச்சிகரமாக உள்ளது.

**ஆன்கர்பெர்க்:..**நீங்கள் வெகுதூரம் பயணித்து வந்தீர்கள். ஆனால், அந்த நிகழ்ச்சி நடந்தது, அங்கே இருக்க வேண்டும் என்று நீங்கள் விரும்பியது, உங்கள் இருவரின் உள்ளங்களையும் நிச்சயமாக உருக்கி இருக்கும், அப்போது தேவன் தமது கிரியையை தொடங்கினார், அடுத்த வாரம் இந்நிகழ்ச்சியில் சில சோகமான செய்திகள் வரவுள்ளன. மைக்கேல், இந்த நிகழ்ச்சியை பார்க்கும் நண்பர்களுக்கு, வேத வசனத்தில் இருந்து 45 நொடிகளில், உங்கள் ஆலோசனையை

கூறுங்கள். அது பாதிக்கப்பட்ட பாதுகாப்பாளருக்கு பயனுள்ளதாக இருக்கும். அவர்கள் நேசிப்போரை அவர்கள் பாதுகாக்கிறார்கள். அவர்கள் சித்தத்தின்பழ அது நடக்கிறது.

**டாக்டர் மைக்கேல் எஸ்லே:...**2 கொரிந்தியர் 1: 3-7 இந்த கடினமான சூழ்நிலையில் எப்படி ஆறுதல் தருவது என்று பவுல் கூறியுள்ளார். அவர் அதைப் பற்றி தெளிவாகக் கூறியதுடன், ஆறுதல் தேவைப்புடுபவர்களுக்கு எப்படி அதை வழங்கவேண்டும் என்றும் கூறியுள்ளார். அதைப்பற்றி கூறுவதென்றால், ஒருவர் தனிப்பட்ட முறையில் வேதனையோடு இருக்கலாம். அவர்களுக்கு பிறர் உதவலாம், அவர்கள் பாதுகாப்பாளர்கள் உதவலாம் என்று அதைப் பற்றிய விளக்கத்தை பவுல் கூறுகிறார்.ஆனால் வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்களை சிலர் சரியானபடி புரிந்து கொள்வதில்லை என்பதே உண்மை. கென், ஜோனியை பாதுகாக்கிறார், சின்டி என்மீது அக்கறை காட்டுகிறார், உங்கள் நண்பர்கள், தாயார், தந்தை, சகோதரி, குழந்தை மீது நீங்கள் அக்கறை காட்டுகிறீர்கள், அதற்கான ஊழியம் ஒன்று உள்ளது, அதற்கு 1,2,3, என்று மதிப்பெண் தரமுடியாது. ஆனால் அந்த ஊழியம் தேவன் உங்களுக்கு தந்தது, அதாவது தங்களை பாதுகாக்க முடியாதவர்கள் முPது நாம் அக்கறை காட்டுவதே அந்த ஊழியம், அவரது மேன்மையான பார்வையில் அது மேலானது, வல்லமையானது. எப்படி கென், ஜோனி மீது அக்கறை காட்டுகிறார்,

எப்படி சின்டி என்மீது அக்கறை காட்டுகிறார் என்பதன் மூலம் அதைப் பற்றி நீங்கள் அறிந்துகொள்ளலாம்.

**ஆன்கர்பெர்க்:**..நண்பர்களே, அடுத்த வார நிகழ்ச்சியை பாருங்கள். அதில் தொடக்கம் முதல் முடிவு வரை பல விஷயங்களை பேசப்போகிறோம். சிலர், பலமுறை தங்கள் வாழ்நாளில் செத்து, செத்து பிழைக்கிறார்கள், நீங்கள் ஒரு பாதுகாப்பாளராக இருந்தால், அதைப்பற்றி என்ன நினைப்பீர்கள், என் சிறந்த நண்பரை நான் இழக்கப்போகிறேன், அவரில்லாமல் நான் வாழமுடியுமா என்று தெரியவில்லை என்றுதானே நினைப்பீர்கள்? அந்த ஒரு நேரத்தில் தேவன் எப்படி உதவுவார் என்பதை பற்றி பேச உள்ளோம். அப்படிபட்ட சூழ்நிலையில் பாதிப்போடு உள்ளவர்களுக்கு நாங்கள் ஆலோசனை வழங்குவோம், அடுத்த வாரமும் எங்களோடு இருப்பீர்கள் என நம்புகிறேன்.

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2013 A.T.R.I.